**ஜா-எல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜா-எல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஜா-எல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடா்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடா்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடா்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன்

ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்கீட்டு நியம இலக்கம் 3.5 இன் கீழ் நிலையான சொத்துக்களை எளிதான முறை ஒன்றின் கீழ் பெறுமானத்தேய்விடுதல் மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மேற்கொள்ளும் கணக்கொன்றினை பேணாது நிலையான சொத்துக்களினுள் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தமையால் சொத்துக்களின் கிரயம் அல்லாது தேறிய பெறுமதிகள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய வாகன வாடகை ரூபா.952,060 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது பேரேட்டு இலக்கம் 01 இன் கீழ் திருத்திக் காண்பிக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான பெறவேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதன மானியங்கள் ரூபா.106,758,461 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | கடந்த வருடத்திற்கான மூலதன மானியங்கள் மீளாய்வாண்டில் ரூபா.4,452,469 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான குறிப்பு இலக்கம் 5 இன் கீழ் மீண்டெழாத செலவினங்களுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் ரூபா.4,356,539 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றில் அத்தொகை உள்ளடக்கப்பட்டிராமையால் வருமானங்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா.184,877 இனால் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | வெகுமதியாக கிடைத்த ரூபா.248,000 தொகையான ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் இருப்பானது மூலதன பெறுவனவுகளின்கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிராத ரூபா.6,800,000 தொகையான 7 செயற்திட்டங்களுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் | செயற்றிட்டத்திற்கான நிதி ஏற்பாடு கிடைக்காது என்பது இறுதி காலப்பகுதியிலேயே அறிய தரப்பட்டது என்பதை தெரிவித்துக் | |

| | |
|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்தமையால் அந்த அளவினால் அந்தக் கணக்குகளில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தன. | கொள்கின்றேன். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 06 கணக்கு விடயங்களின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான கணக்கு மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதிகளுக்கிடையே ரூபா.98,891,470 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | குறித்த மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டு கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினை கொண்ட 3 மீதிகளுக்கு உரிய ரூபா.10,779,769 தொகை மற்றும் 5 வருடங்களை விஞ்சிய 3 மீதிகளுக்கு உரிய ரூபா.109,471,624 தொகையான பெறவேண்டிய மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மதியுரையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளபட்டுள்ள அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா.5,149,327 பெறுமதியான 21 செலுத்தவேண்டிய மீதிகளை செலுத்தி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | தீர்ப்பனவு செய்வதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். |

### 1.6.5 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1992 ஆண்டு முதல் முற்கொண்டுவரப்படும் ரூபா.236,425 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதி ஒன்றினை தீர்ப்பனவு செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த | கணக்கு மதியுரையாளரிடமிருந்து கிடைத்துள்ள அறிக்கை உள்ளூராட்சி ஆணையாளருக்கு | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| கணக்கு மதியுரையாளரின் அறிக்கையின் பிரகாரம் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க திரண்ட நிதியத்திற்கு சீராக்கி மீதியினை அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் அது உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தபோதிலும் இது வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.6.6 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இனங்காணப்பட்ட நானாவித வைப்புக்கள் ரூபா 135,746,660 ஆன மீதியும், ரூபா 53,678,225 தொகையான 6 வகையான வைப்புக்களுக்குரிய மீதிகளும், ரூபா 221,848,091 பெறுமதியான 4 நடைமுறை சொத்து உருப்படிகளும் ரூபா 106,451,654 தொகையான 2 நடைமுறை பொறுப்பு உறுப்படிகளையும் சான்றுபடுத்துவதற்கு போதிளயவான பட்டோலைகள் மற்றும் விரிவான காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பட்டோலைகளை விரைவாக தயாரித்து பழைய மீதிகளை கண்டறிந்து எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் இலக்கம் 762 | இருப்பு மட்டத்தினை பேணுதல் மற்றும் மீள் கட்டளை மட்டத்தினை தீர்மானித்தல் களஞ்சிய உத்தியோகத்தரின் கடமை ஒன்றான போதிலும் அந்த மட்டத்தினை பேணாத காரணத்தால் ரூபா.828,576 | களஞ்சியத்தின் அனைத்து பொருள் மற்றும் உருப்படி ஆகியவற்றின் ஆகக்குறைந்த மட்டத்தினை தயாரித்து களஞ்சிய பொறுப்பாளருக்கு கையளிப்பதற்கு | தொடர்புடைய பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பெறுமதியான 40 தார் கொள்கலன்களின் அவசர கொள்வனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது . | குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 40,748,205 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 70,783,624 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய நிலுவை வாடகையினள் கடை வாடகை மற்றும் குத்தகை வாடகை ஆகியவற்றின் நிலுவைகள் முறையே ரூபா.7,191,817 மற்றும் ரூபா.9,196,226 ஆனபோதிலும் மீளாய்வு ஆண்டிற்கு நிலுவையிலிருந்து அறவிடப்பட்டிருந்தது முறையே ரூபா.2,156,751 மற்றும் ரூபா.100,918 என்பதால் நிலுவையை அறவிடுவதில் நலிவான மட்டம் ஒன்று காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இறைச்சிக் கடைகள் மற்றும் வாரச்சந்தைகளை நடாத்தி சென்ற கேள்வியாளர்களினால் கொவிட் நிவாரணத்தை பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அவ்வாறான போதிலும் கொவிட் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டதன் பின்னர் உச்ச அளவில் குறித்த கடை வாடகை தொகை அறவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ராகம பொதுச் சந்தையில் 08 கடைகளின் குத்தகை உடன்படிக்கையை எடுத்த நபர் அல்லாது வேறு நபரினால் நீண்டகாலமாக வியாபார பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேல் மாகாணத்தின் உள்ளுராட்சி ஆணையாளரின் 2020 டிசம்பர் 03 ஆம் திகதிய | சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய குத்தகை உடன்படிக்கை வரைபாக்குவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் புதிய உடன்படிக்கை ஒன்று வரைபாக்கப்பட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது. அதற்கமைய மேலதிக | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்படைப்புக்கான சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | LGD/13/2016(I) ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த ஆதனங்கள் தொடர்பிலான மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகையை போன்றே அறுபது மடங்கிற்கு சமனான தொகை ஒப்படைப்புக்கான கட்டணமாக அறவிடப்பட்டு ஆதனத்தின் உரித்து தற்போது வியாபார பணிகளை மேற்கொள்ளும் நபருக்கு சாட்டுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு உள்ளது என்பதை தெரிவிக்கின்றேன். | |
| (இ) | ராகம வாரச்சந்தை 2021 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்படும்போது குத்தகை உடன்படிக்கையின் மூன்றாம் பிரிவின் பிரகாரம் 9 மாத காலத்திற்கான குத்தகை தொகையான ரூபா.845,370 இற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆதனப் பிணை ஒன்று அல்லாது வங்கி பிணைமுறி ஒன்று வைக்கப்பட வேண்டியதுடன் இந்த பெறுமதிக்கு சமனான ஆதனம் ஒன்று அட்டோனி அதிகாரப் பத்திரத்தின் ஊடாக சபைக்கு சாட்டுவதற்கு இணங்கியிருந்தது. எனினும் 2022 ஜனவரி 06 ஆம் திகதி வரையிலும் இந்த அட்ரோனி அனுமதிப்பத்திரத்தினை பதிவு செய்திராததுடன் இந்த ஆதன பிணை சபைக்கு சாட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த குத்தகையாளரினால் 2021 ஆம் ஆண்டுக்கான நிலுவைத் குத்தகை பணம் ரூபா.318,058 தொகை 2022 ஜனவரி 06 ஆம் திகதி வரையிலும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் குத்தகை நிவாரணங்களை கோரியுள்ளதுடன் ஆதனப் பிணையினை பதிவு செய்து வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும்

நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் கந்தான மக்கள் வங்கியில் பேணி செல்லப்படும் நடைமுறை கணக்கில் ஒவ்வொரு மாதமும் ரூபா.146 மில்லியன் மற்றும் ரூபா.190 மில்லியன் ஆன வீச்சினுள் பேணப்படும் காசு மீதி ஒன்று தொடர்ச்சியாக பேணி செல்லப்படுவதுடன் அந்த பணத்தை முதலீடு செய்வது தொடர்பில் சபை கருத்திற் கொண்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த வருமான இலக்குகளை உரிய காலப்பகுதியினுள் அறிவதற்கு முடியாதிருந்தமை மற்றும் அவசர இடர் சந்தர்ப்பங்களில் நிதி ஏற்பாடுகளின் தேவைப்பாடு காணப்படுகின்றமையால் நடைமுறை கணக்கில் மீதி ஒன்றினை பேணுவதற்கு நேர்ந்துள்ளமையை தெரிவித்துக்கொள்கின்றேன். | மிகைப் பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காணிகள் துண்டாக்கப்பட்டு ஏலமிடப்பட்ட ஜா-எல கணுவன அரலிய பூங்கா எனும் பெயருடைய காணியில் சபைக்கு சாட்டப்பட்டிருந்த லொட் இலக்கம் 13 என பெயரிடப்பட்டுள்ள 02 ரோட் 31.62 பேர்ச் பரப்பளவான திறந்த காணிக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் மற்றும் வரை படத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருந்த நிலத் திட்டம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் அதனை பரிசோதித்தபோது லொட் இலக்கம் 18 உடன் இணைந்ததாக மற்றுமொரு காணித் துண்டு ஒன்று லொட் இலக்கம் 19 ஆக புதிதாக இணைக்கப்பட்டு இரண்டு | சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு கையளிப்பு உறுத்துறுதி அவசியம் என்பதால் அந்த உறுத்துரிதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. உரித்துறுதியினை பெற்றுக் கொண்டதும் உடனடியாக சட்ட உரித்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஆதனங்களை பாதுகாப்பதற்கும் தெளிவான உரித்தினை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாடி வீடு ஒன்று நிர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வீட்டின் முற்புறம் வீதிக்கு தாரிடப்பட்டிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. அதற்கமைய லொட் இலக்கம் 13 கொண்ட பிரதேசம் முழுமையாக அத்துமீறிய குடியேற்றத்திற்கு உள்ளாகியுள்ளமை அவதானிக்கப்பட்டமையால் சபையின் ஆதனங்களின் பாதுகாப்பு மற்றும் அத்துமீறிய குடியேற்றங்களை அகற்றுவது தொடர்பில் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | தம்புவ பிரதேசத்தில் அமைந்துள்ள தம்புவ வீட்டுத்திட்டத்தில் அமைந்துள்ள காணியின் சுமார் 05 ஏக்கர் பரப்பளவான காணி பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஜனவரி 07 கணக்காய்வு திகதி வரையிலும் சபைக்கு அது கையளிக்க பட்டிருக்கவில்லை. இக் காணியில் அத்துமீறிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக 2018 செப்டெம்பர் 10 ஆம் திகதி வரையிலும் இதன் 5 ஏக்கர் பரப்பளவவான காணியில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவான காணி மாத்திரம் எஞ்சி உள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் குறித்த காணியை உரிய முறையில் சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை இதற்கு தாக்கமளித்திருந்தது. | வரை படம் கிடைத்தவுடன் உடனடியாக சாட்டுதல் கட்டளை ஒன்றினை வழங்குவதாகவும் வீடமைப்பு அதிகார சபையின் கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். | சபைக்கு துரிதமாக சுவீகரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | -------------------------------------- | ---------------- |
| (அ) | உரித்துறுதி மற்றும் காணியின் வரைபடம் ஆகிய | ஆதனங்களை சரியாக பொதுவாக இனங்காண | சபைக்கு சொந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டும் அல்லது அவற்றில் ஒன்று சரியாக இனம் காணக்கூடிய வகையில் சபையிடம் காணப்படும்போது இனம் காண முடியாத காணியாக 08 காணிகள் மதிப்பாய்வு சபையினால் குறிப்பிடப்பட்டிருந்தன. | முடியாத நிலை ஒன்று காணப்படுகிறது. அவற்றை இனங்கண்டு முறையாக தற்போதைய பதிவேடுகளில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | ஆதனங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 06 காணிகளில் அத்து மீறிய வகையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அத்துமீறிய நிர்மாணங்களுடனான பெரும்பாலான காணிகள் ஏலமிடுவதற்கான காணிகளுக்காக கிடைக்கும் பொதுவான காணித்துண்டென்பது அவதானிக்கப்பட்டது. இந்த காணிகளின் உரித்தினை பாதுகாப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையால் இவ்வாறான அத்துமீறிய நிர்மாணங்கள் இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக குறித்த ஏலமிடப்பட்ட காணிகளில் வதியும் உரிமையாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பிற்கும் பாதகமான தாக்கம் ஏற்பட்டிருந்தது. | செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் ஆளுநரின் அறிவுரைகளை பெற்றுக்கொள்வதற்கு நிதிச்சபை தீர்மானித்துள்ளமையால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றதை தெரிவித்துக்கொள்கின்றேன். | அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றி தெளிவான உரித்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இற்றைப் பெறுமதி ரூபா 1,200,000 ஆன 8 தொன் நிறையுடைய வீதியை அழுத்தும் இயந்திரம் 2019 மே 21 ஆந் திகதி முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்தச் வீதியை அழுத்தும் இயந்திரத்ழதை கைத்தவிர்ப்பு செய்தல் அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | அதை முறையாக பயன்படுத்த வேண்டும். |

**3.4 பணிகள் நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள்**

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 103 கிராமிய வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக | பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எஞ்சி | எஞ்சியுள்ள செயற்றிட்டங்களின் |

| | | |
|---|---|---|
| ரூபா.87,000,000 நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டு அதற்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இச் அசயற்றிடங்கள் இதற்கு அடுத்த வருடத்தில் எஞசர்த வகையில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கமைய எந்த செயற்றிட்டத்தினதும் பணிகள் மீளாய்வு ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் இந்த பணம் கிடைப்பது தொடர்பில் அச்சுறுத்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க நேர்ந்திருந்தது. | இருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும் பகுதி அளவிலேனும் பூர்த்தி செய்யப்பட்ட செயல் திட்டங்களுக்காக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பூர்த்தியடையாதுள்ள காரணத்தால் இவ்வாறு கடன்கொடுத்தோராக காணபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கின்றேன். | பணிகளை நிறைவு செய்தல் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பொருட்கள் மற்றும் சேவைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) புறநெகும கட்டிடத்தின் அலுவலகத்தின் ஒரு பகுதியினை தடுப்பாக மாற்றுதல், மின்சாரம் மற்றும் கணினி இணையதள வசதிகளை வழங்குதல், உள்ளக தொலைபேசி கட்டமைப்பினை தயாரித்தல் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல் போன்ற பொருட்கள் மற்றும் சேவை பெறுகைகளுக்காக ரூபா.17,775,208 செலவிடப்பட்டிருந்தது. 05 உருப்படிகளும் ஒரே நிறுவனத்தின் மூலம் விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனங்களுக்காக கூறு விலைகளை மதிப்பீடு செய்யும்போது முன்னுரிமை வழங்கப்படுவதாக பந்தியொன்று பெறுகைகள் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் பெறுகை மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் ஒவ்வொரு பொருட்கள் மற்றும் | ஒரே நிறுவனத்தில் இருந்து சமர்ப்பிக்கும் போது அதற்கு மதிப்பீடு செய்யும் முன்னுரிமை வழங்கப்படுவதாக ஒரு பந்தி பெறுகைகள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டமைக்கு இப்பணி மிகவும் முறையாகவும் சபைக்கு நலன் ஏற்படும் வகையிலும் நிறைவேற்றும் நோக்கத்திலேயே என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் மேலதிகமாக மேற்கொண்ட பணிகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சேவைகளை விநியோகிப்பதற்காக விசேடமான வழங்கல் நிறுவனங்களுக்கு விலை கேள்வி சமர்ப்பிப்பதற்கு முன் வராது இருப்பதுடன் அது அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 1.2 ஆம் பிரிவுக்கு முரணானதாகும். அதற்கமைய அனைத்து வழங்கல்களுக்காகவும் விலைக் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரமே என்பதுடன் அவற்றுள் அலுவலக உபகரணங்களுக்காக தேசிய ரீதியில் வழங்குநர்கள் பெருமளவான எண்ணிக்கையானோர் இருந்தபோதிலும் இந்நிறுவனத்தின் விலைக்கேள்விக்கு மாத்திரம் விலைக்கேள்வி மதிப்பீட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது. மேலதிகப் பணிகளுக்காக ரூபா.4,258,160 கொடுப்பனவு மேற்கொள்ளும்போது ஆரம்ப பரிந்துரை மேற்கொள்ளப்பட்டு மின்சார பொறியாளரின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தான சந்தையில் காணப்படும் முட்புற வேலியினை அமைத்து வாயிற்கதவு ஒன்றினை புதிதாக இடுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கட்டிடங்களின் அத்தியாவசியமான பகுதிகளை பழுதுபார்த்தல் ஆகியவற்றுக்காக 2021 டிசம்பர் 03 ஆம் திகதி 02 வாரங்களில் பூர்த்தி செய்வதற்கு சங்கம் ஒன்றுடன் ரூபா.2,999,879 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2021 அக்டோபர் 27 ஆம் திகதி சங்கத்தினால் 75 சதவீத முற்பணம் | டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு பணம் மீளளிப்பு செய்யப்படவேண்டியதாக காணப்பட்டமையால் பண மீளளிப்பிற்கு மாத்திரம் உரிய பணத்தை உள்ளடக்கி மீளளிப்பு கொடுப்பனவு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த பணியினை நிறைவு செய்தல் தொடர்பில் | அரசு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஒன்று கோரப்பட்டிருந்ததுடன் அரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.4.4 (I) இற்கு முரணாக 2021 டிசம்பர் 08 ஆம் திகதி 70 சதவீதமான முற்பணமான ரூபா.2,099,286 செலுத்தப்பட்டிருந்தது. 2022 ஜனவரி 10 ஆம் திகதி தளப்பரிசோதனையில் 02 வாயிற் கம்பங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் 2021 டிசம்பர் 03 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராதபோது 2021 டிசம்பர் 14 ஆம் திகதி குறித்த பணியை உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதிப்பிரமாணம் 237 பட்டோலையில் (III) பிரகாரம் இப்பணி இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டு சிறந்த நிலைமையில் உள்ளதாகவும் மதிப்பீடுகள் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மீறப்படாத வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் சான்றுபடுத்தி ரூபா.2,999,879 ஆன தொகை சங்கத்திற்கு செலுத்துவதற்கு பணி உத்தியோகத்தரினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத செயற்பாடுகளுக்காக போலியாக பணம் கோரி திகதி இன்றி ரூபா.2,999,879 ஆன மதிப்பிடப்பட்ட தொகைக்கு சமனான இறுதி கொடுப்பனவை விபரம் மற்றும் அளவீட்டு பத்திரம், கொடுப்பனவு உறுதிசீட்டுடன் 2021 டிசம்பர் 24 ஆம் திகதி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

திருப்திகொண்டு பணி உத்தியோகத்தரால் கையொப்பமிடப்பட்டிருந்தது என்பதை தெரிவிக்கின்றேன்.